(ஆறாவது பாராளுமன்றம் - நான்காவது  கூட்டத்தொடர்)

**இல. 26.]**

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

**2009, செத்தெம்பர் 10, வியாழக்கிழமை, மு. ப. 9.30 மணிக்கு**

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0184 / ' 09

1.

கௌரவ பேமசிறி மானகே,– பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொது மக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(ஆ) “மஹிந்த சிந்தனை” எனும் கொள்கைப் பிரகடனமொன்று வெளியிடப்பட்டுள்ள தென்பதை அவர் அறிவாரா ?

(ஆ) (i) “மஹிந்த சிந்தனை” எனும் அச்சிடப்பட்ட பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள பிரேரணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவற்றில் இற்றை வரை செயற்படுத்தப்பட்டுளள பிரேரணைகளின் எண்ணிக்கை யாதென்பதையும் ,

(iii) மீதியுள்ள பிரேரணைகளை செயற்படுத்துவதற்கு எவ்வளவு காலமாகும் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0279 / ’09

2.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2007 ஆம் ஆண்டில் 63 பிரதான இரயில் வண்டிகளும் 142 ஏனைய இரயில் வண்டிகளும் தடம் புரண்டதாக அறிக்கையிடப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) இதன் விளைவாக ஏற்பட்ட உடல் ரீதியிலான சேதம் மற்றும் பௌதீக ரீதியிலான நட்டம் ஆகியவை எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அவ்வாறானதொரு நிலைமை ஏற்படுவதற்கான காரணம் யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0292 / '09

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இற்றைவரையான கடந்த 10 வருடங்களுக்கான,

(i) இலங்கைக்கு வருகை தந்த உல்லாசப்பயணிகளின் எண்ணிக்கையையும்,

(ii) அவர்களின் நாடுகள், அவர்கள் இங்கு தங்கியிருந்த சராசரி காலம் ஆகியவற்றையும்,

(iii) ஈட்டப்பட்ட சராசரித் தொகையையும், செலவு செய்யப்பட்ட சராசரிச் செலவுத் தொகையையும்

வருட வாரியாக அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த 10 வருடங்களாக உல்லாசப் பயணத்துரையுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டிருந்த ஆட்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இற்றைவரை கடந்த 10 வருடங்களில்,

(i) நாட்டில் இருந்த ஹொட்டல் அறைகளின் எண்ணிக்கையையும்,

(ii) ஹொட்டல்கள் சார்ந்திருந்த நட்சத்திர வகைப் பிரிவுகளையும்

வருடவாரியாக அவர் மேலும் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0388 / '09

4.

கௌரவ சாகல ரத்நாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மேல் கொத்மலை நீர் மின் கருத்திட்டம், நுரைச்சோலை அனல் மின் கருத்திட்டம் மற்றும் கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று வலு ஆலை ஆகியவற்றின் மெகாவாட் ஒன்றுக்கான (EPC செலவு) உற்பத்தி மூலதனச் செலவினை, தற்போது ஏற்பட்டுள்ள விலை ஏற்றத்துடன் சேர்த்து அவர் வெவ்வேறாக இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) பின்வரும் ஆலைத்தொகுதி ஒன்வொன்றிற்குமான இயக்கத்திற்கான எரிபொருள் மற்றும் கருத்திட்டத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வரியின் அலகொன்றிற்கான செலவு ஆகியவற்றை அவர் குறிப்பிடுவாரா

(i) களனிதிஸ்ஸவில் உள்ள இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(ii) AES ற்கு சொந்தமான இணைந்த சுற்று ஆலை,

(iii) கெரவலப்பிட்டிய இணைந்த சுற்று ஆலைத்தொகுதி இணைந்த சுற்று நிலையில் மற்றும் ஒற்றைச் சுற்று நிலையில்,

(iv) யாழ்ப்பாணத்திலுள்ள தனியாருக்குச் சொந்தமான (IPP) ஆலை மற்றும் ஏனைய சகல IPP ஆலைகளும்,

(v) யாழ்ப்பாணத்திலுள்ள Aggreko தற்காலிக ஆலை,

(vi) இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான பியட் வாயு விசையாழி.

(இ) கெரவலப்பிட்டிய கருத்திட்டத்திற்காக வெஸ்ட் கோஸ்ட் பவர் லிமிட்டெட் பெற்றுக்கொண்ட கடனிற்கான அவர்கள் இணங்கிய வட்டி வீதத்தினையும் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0432 / '09

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மாத்தளை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0505 / '09

6.

கௌரவ சந்திம வீரக்கொடி,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வரையறுக்கப்பட்ட கல்விச் சேவையாளர் சிக்கனக் கடனுதவிக் கூட்டுறவுச்சங்க பணிப்பாளர் சபை தாபிக்கப்பட்ட திகதி யாதென்பதையும் ,

(ii) இச் சங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட மொத்த பணியாற் தொகுதியின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(iii) தற்போதைக்குள்ள வெற்றிடங்கள் மற்றும் மேலதிக பணியாற் தொகுதியின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) சமீபத்தில் ஊழியர்களை சேர்த்துக்கொள்வதற்கான பத்திரிகை அறிவித்த லொன்று பிரசுரிக்கப்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா ?

(இ) ஆமெனில், மேற்படி அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகைகள் யாவை யென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஈ) (i) புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டதன் பின்னர் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ள ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) அவர்களது பெயர்கள்,முகவரிகள் மற்றும் பதவிகள் யாவையென்பதையும்,

(iii) மேற்படி ஊழியர்களை சேர்த்துக்கொள்கின்றபோது நிறுவனம் கடைப் பிடித்த நடைமுறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(உ) இன்றேல், ஏன் ?

0379 / '09

7.

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) மஹிந்த சிந்தனை கொள்கை பிரகடணத்தின் 09 ஆம் பக்கத்தில் (சிங்கள மொழி) பிரேரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் முன்பள்ளி ஆசிரியைகளுக்குத் தேவையான தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதிகளை மாதாந்தம் வழங்குதல் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா ?

(ஆ) (i) தற்போது மேற்படி பயிற்சி மற்றும் நிதி வசதிகள் வழங்கப்படும் பிரதேச செயலகப் பிரிவுகள் யாவையென்பதையும் ,

(ii) அதன் பிரகாரம், மேற்படி தோழில்நுட்பப் பயிற்சி மற்றும் நிதி வசதி வழங்ப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0242 / '09

8.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை சட்டக்கல்லூரி எச்சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) 2000 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குள் இலங்கை சட்டக் கல்லூரியின் விரிவுரைகள் நடாத்தப்பட்ட மொழிமூலம் யாதென்பதையும்,

(iii) 2007 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரை இலங்கை சட்டக் கல்லூரியில் விரிவுரைகள் நடாத்தப்படுகின்ற மொழிமூலம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா ?

(ஆ) 2010 ஆம் ஆண்டில் இருந்து இலங்கை சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்ற வயதெல்லை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா ?

(இ) இன்றேல், ஏன் ?

0280 / '09

9.

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) புகையிரத திணைக்களத்தினால் தனியார் கம்பனியொன்றுக்கு மூன்று தடைப்பூண்டு வண்டிகள் வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(ii) ஆமெனில், அக் கம்பனியின் பெயர், முகவரி மற்றும் தடைப்பூண்டு வண்டிகள் வழங்கப்பட்ட திகதி என்பவை யாவை என்பதையும்,

(iii) இவை வழங்கப்பட்டுள்ள அடிப்படை அல்லது உரிய ஒப்பந்தம் யாது என்பதையும்,

(iv) மேற்படி ஒப்பந்தங்களின் பிரகாரம் உரிய திணைக்களத்திற்குப் பணம் செலுத்தப்பட்டுள்ளதா என்பதையும்,

(v) உரிய பணம் செலுத்தப்படாதுள்ளதால் திணைக்களத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தின் நிதி ரீதியான பெறுமதி எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0243 / '09

10.

கௌரவ பேமசிறி மானகே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2008 ஜனவரி மாதம் தொடக்கம் 2009 மார்ச் 31ஆம் திகதி வரை மரணமடைந்த பாதுகாப்புப் படையினர்களில் எத்தனை பேருக்கு நட்டஈடுவழங்கப் பட் டுள்ளதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிடப்பட்ட இந்தக் காலப்பகுதியில் மரணமடைந்த பாதுகாப்புப் படையினர்களில் நட்டஈடு வழங்கப்படாத தொகையினர் எத்தனை பேர்,

(ii) மரணமடைந்த பாதுகாப்புப்படையினர் ஒருவருக்கு செலுத்தப்படும் நட்ட ஈட்டுத்தொகை எவ்வளவு,

(iii) இந்த நட்டஈட்டுத் தொகை செலுத்துதல் தாமதமடைவதற்கான காரணம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல் ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்கள்

1.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அலுவல்கள்,— ஒழுங்குப் பத்திரத்தில் காணப்படும் பொது அலுவல்களில் 1 ஆம் இலக்க பிரேரணை மீதான நடவடிக்கைகள் இன்றைய அமர்வில் 23 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினின்றும் விலக்குப்பெறுமாக.

2.

பாராளுமன்றச் சபைமுதல்வர்,— பாராளுமன்ற அமர்வு,— 7 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினாலும் 2009.05.26 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல் இன்றைய தினம் சபை அமர்வு நேரம் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 4.30 மணிவரை இருக்குமாக. பி.ப. 4.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

3.

கௌரவ விஜித ஹேரத்,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி, — பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"பஹலகம சிறீ சோமரத்தன நாஹிமி தேரர் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

## பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*1.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரேரணை,— 1959 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்கச் சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்ட (40 ஆம் அத்தியாயமான) பொது மக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் மாண்புமிகு சனாதிபதியவர்களால் மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் II ஆம் பாகத்தின் ஏற்பாடுகள் 2009 செத்தெம்பர் மாதம் 02 ஆம் திகதியிலிருந்து இலங்கையெங்கனும் நடைமுறைப்படுத்திக்கொண்டு செய்யப்பட்ட பிரகடனம் அங்கீகரிக்கப்படுமாக.

*2.

இந்தியக் குடிவரவு தொழிலாளர் (நீக்கம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*3.

பாராளுமன்ற தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*4.

சொத்துக்களால் ஆதாரப்படுத்தப்பட்ட பிணைப் பொறுப்பளித்தல் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*5.

காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தல் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு

*6.

தவணை தவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*7.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*8.

இலங்கைப் பகிரங்கத் தொழில் முயற்சிகள் சீர்திருத்த ஆணைக்குழு (நீக்கச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*9.

குற்றச் செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்பு சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூன் 17, 2008) [1].

*10.

ஆளுநர்களின் ஓய்வூதிய சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*11.

மிகைப்பொருள் திணிப்பெதிர்ப்பு மற்றும் எதிரீட்டுத் தீர்வைகள் சட்டமூலம்— விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*12.

வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*13.

செயலூக்கமற்ற சொத்துக்கள் (மீட்புச்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*14.

சூதாட்ட (விசேட ஏற்பாடு) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (யூலை 18, 2006) [1].

*15.

முற்பாதுகாப்பு வழிமுறைகள் சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (ஏப்பிறல் 04, 2006) [1].

*16.

குடியியல் வான்செலவு சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*17.

குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*18.

காடு (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*19.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச் )சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*20.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர் ,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 285, நிகழ்ச்சித்திட்டம் 1,— † 2009 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2009 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் அறுபத்து எட்டு கோடி ஐம்பத்து மூன்று இலட்சத்து தொன்னூற்று மூன்றாயிரத்து தொளாயிரத்து முப்பத்து எட்டு (ரூபா 68,53,93,938) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப் பட்டுள்ளவாறு செலவு செய்யப்படலாம்:-

அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| தலைப்பு: 285 | — | கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சு | ரூபா |
| நிகழ்ச்சித்திட்டம் : 01 | — | அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | |
| கருத்திட்டம் : 01 | — | கமத்தொழில் அபிவிருத்தி மீண்டுவருஞ் செலவுகள் | ரூ. 68,53,93,938 |
| | | | ரூ. 68,53,93,938 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

† 2009, ஓகத்து மாதம் 18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 10 வரையுள்ள குறைநிரப்பும் மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா. 18,845,510,000.

*21.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.1),— 06/2006 ஆம் இலக்கமும் 2006.04.25 ஆம் திகதியும் கொண்ட பொது நிர்வாக சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக 2006.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர் நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்கான மாதாந்த சம்பளங்கள் பின்வருமாறு அமைய வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ.70,000.00 |
| | ரூ. 1,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகளும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவரும் | ரூ. 65,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 63,500.00 |

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய சம்பளங்களாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்றப்பட்ட சம்பளத்திட்டங்களுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் சம்பளங்கள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டு மென இந்தப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*22.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.2),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர், மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோருக்காக, சம்பளத்தின் 25% இற்குச்சமமான மாதாந்த ஆள்சார் படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் கீழ் இந்தப் பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும், உயர்நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதிகளுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஆள்சார் படிகளாக பாராளுமன்றத்தினால் 1998 மாச்சு மாதம் 17 ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட படிகளுக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப்படும் ஆள்சார் படிகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளு மன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*23.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.3),— மேலும், 2007.08.01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு பிரதம நீதியரசரும் உயர்நீதிமன்ற நீதிபதிகளுக்கும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவருக்கும் மேன்முறையீடு நீதிமன்ற நீதிபதிகளுக்கும் கீழ்க்காணுமாறு மாதாந்த வீட்டு வாடகைப் படிகள் செலுத்தப்பட வேண்டுமென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108(1) ஆம் உறுப்புரையின் இப்பாராளுமன்றத்தினால் மேலும் தீர்மானிக்கப்படுகின்றது.

| | |
|---|---|
| மாண்புமிகு பிரதம நீதியரசர் | ரூ. 27,500.00 |
| உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிபதிகளின் தலைவர் | ரூ. 25,000.00 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் | ரூ. 22,500.00 |

மேலும், உயர் நீதிமன்றத்தினதும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் நீதிபதி களுக்குச் செலுத்தப்பட வேண்டிய வீட்டு வாடகைப் படியாக 2004 செத்தெம்பர் மாதம் 09 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட படிக்குப் பதிலாக, இப் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட வீட்டு வாடகைப் படி நடைமுறைப்படுத்தப் பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*24.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழான தீர்மானம் (இல.4),— 2008.07.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, பிரதம நீதியரசருக்கு உபசரணைப் படியாக மாதாந்தம் ரூ. 3,500 படியொன்றைச் செலுத்துவதற்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 108 (1) ஆம் உறுப்புரையின் கீழ் இப்பாராளுமன்றத்தினால் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.

மேலும் இதற்கு முன்னர் பிரதம நீதியரசருக்காக பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட உபசரணைப் படிக்குப் பதிலாக, இப்பிரேரணையினால் தீர்மானிக்கப் படும் உபசரணைப் படி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றத் தினால் தீர்மானிக்கப்படுகின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

*25.

பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரும்,— மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் கீழ் கட்டளை,— (52 ஆம் அத்தியாயமான) மதுவரிக் கட்டளைச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் மதுவரி தொடர்பில் ஆக்கப்பட்டு 2008, ஏப்பிறல் மாதம் 10 ஆந் திகதிய 1544/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.06.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*26.

தபால், தொலைத்தொடர்புகள் அமைச்சர்,— அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் கீழ் விதி,— (190ஆம் அத்தியாயமான) அஞ்சல் அலுவலகக் கட்டளைச் சட்டத்தின் 12, 21, 25, 27, 81, 62, 06, 39, 49, 44, 68, 67, 40, 24, 59, 60, 35, 59, 67 மற்றும் 64ஆம் பிரிவுகளின் கீழ், அஞ்சல், தொலைத்தொடர்புகள் அமைச்சரால் நிதி அமைச்சரின் உடன்பாட்டுடன் ஆக்கப்பட்டு, 2007, ஏப்பிறல் மாதம் 25 ஆம் திகதிய 1494/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2007. 07. 17 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான விதி அங்கீகரிக்கப்படுமாக.

*27.

சுகாதார நலத்துறை, போசணை அமைச்சர்,— மருத்துவ கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— இலங்கை மருத்துவப் பேரவையுடனான கலந்தாலோசனையுடன் (105 ஆம் அத்தியாயமான) மருத்துவக் கட்டளைச் சட்டத்தின் 72 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 19 ஆம் பிரிவின் கீழ் சுகாதார நலத்துறை, போசணை அமைச்சரால் ஆக்கப்பட்டு 2009 பெப்ரவரி மாதம் 25 ஆந் திகதிய 1590 / 13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2009.04.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

28.

அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

29.

வடக்கு மற்றும் கிழக்கு இரு மாகாணங்களையும் தற்காலிகமாக இணைத்திருப்பதை இரத்துச் செய்வதற்கான (விசேட பிரமாணங்கள்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

30.

கிராஸ்ரூட்ஸ் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

31.

மஹிந்தானந்த அலுத்கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

32.

அல்ஹாஜ் எஸ். எம். எம். ஹுஸைன் அறநம்பிக்கைப் பொறுப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

33.

பலாத்காரமாக மதம் மாற்றுவதைத் தடைசெய்தல் சட்டமூலம் — பரிசீலனை.

34.

இலங்கை ஜமாஅத் அன்சாரிஸ் சுன்னத்தில் முஹம்மதிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

35.

தாலியவக்க ஸ்ரீ ஆனந்த விஹாரை கலாசார மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

36.

கருணா சமாதி ஒழுங்கமைப்பு (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

37.

கண்டி ஸ்ரீ கல்யானோதய சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

[1] "சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக" எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

0433 / '09

1.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) மாத்தளை மாநகர எல்லைக்குள் அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0434 / '09

2.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பல்லேபொல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0435 / '09

3.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நாவுல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு

எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0436 / '09

4.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) லக்கல பல்லேகம பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0437 / '09

5.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0438 / '09

6.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக்

கேட்பதற்கு,— (2)

(அ) (i) கலேவெல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

0439 / ’09

7.

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தம்புல்ல பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள அரசுக்குரிய காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(ii) அந்தக் காணித்துண்டுகள் வெவ்வேறாக எவை என்பதையும்,

(iii) அந்த காணிகளில் தற்போது தனியார் துறையினருக்கு வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iv) அவ்வாறு யாருக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதையும்,

(v) இந்த காணிகளை வழங்குவதற்காக பின்பற்றப்பட்ட வழிமுறைகள் எவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?